# வாழ்க்கை (9)

வாழ்க்கையைக் கேட்டான்
'செல்வம் கொடு' என்று;
வாழ்க்கை சொன்னது
'உழைத்துப் பெறு' என்று;

வாழ்க்கையைக் கேட்டான்
'பேரும் புகழும் கொடு' என்று;
வாழ்க்கை சொன்னது
'திருப்பிக் கொடு' என்று;

வாழ்க்கையைக் கேட்டான்
'மன அமைதி கொடு' என்று;
வாழ்க்கை சொன்னது
'விட்டு விலகு' என்று...

அ. வெ
பெங்களூர்
29 ஜூன் 2015.